செய்தி வெளியீடு எண்—385 நாள் — 14.7.2009

# செய்தி வெளியீடு

## ஒருகோடி ஏழைக் குடும்பங்களுக்கு
## ''உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்''
## 23.7.2009 அன்று சென்னையில்
## முதலமைச்சர் கலைஞர் தலைமையில்
## மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு.குலாம்நபி ஆசாத்
## தொடங்கி வைக்கிறார்

*****

2009—2010ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், ஏழை எளிய சாமானிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் வரையில், இலவச உயர்சிகிச்சை பெற வகைசெய்யும் "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" அறிவிக்கப்பட்டது. மனிதநேயத்தின் அடையாளமான மாபெரும் இத்திட்டத்தின் தொடக்கவிழா, 23.7.2009 வியாழக்கிழமையன்று, மாலை 4 மணியளவில், சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா அரங்கில் நடைபெற உள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.குலாம்நபி ஆசாத் அவர்கள் ஏழை மக்களுக்குப் பயனளிக்கும் மிகப்பெரிய இத்திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளார்கள். விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் திரு.க.அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன், மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு.காந்திசெல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி, அப்பல்லோ மருத்துவமனைத் தலைவர் டாக்டர் பிரதாப் சந்தர் ரெட்டி, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழக இருதய சிகிச்சை மையத்தின் தலைவர் மற்றும் இயக்குநர்

டாக்டர் ச.தணிகாசலம் ஆகியோரும் கலந்து கொண்டு, வாழ்த்துரை வழங்க இருக்கின்றார்கள்.

விவசாயத் தொழிலாளர் நலவாரியம், மீனவர் நல வாரியம், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சீர்மரபினர் நல வாரியம், பழங்குடியினர் நல வாரியம், ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், பனைமரத் தொழிலாளர் நல வாரியம், காலணித் தொழிலாளர் நல வாரியம், ஊனமுற்றோர் நல வாரியம், அரவாணிகள் நல வாரியம், முடி திருத்துவோர் நல வாரியம், தையல் தொழிலாளர் நல வாரியம், ஓவியர் நல வாரியம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களாக உள்ளோரின் குடும்பங்கள் மற்றும் ஆண்டு வருமானம் 72 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள ஏழைக் குடும்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலமாகப் பயன்பெறலாம். காப்பீட்டு நிறுவனம் ஒவ்வொரு குடும்பத்திற்கும், குடும்ப உறுப்பினர்களின் நிழற்படம் அடங்கிய அடையாள அட்டையை வழங்கும். அந்த அடையாள அட்டையைக் காண்பித்து, அரசு மருத்துவமனைகள் தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 6 தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தின்கீழ் ஏழைக் குடும்பங்கள் உயர் சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ், ஒரு கோடி ஏழைக் குடும்பங்களுக்கு காப்பீட்டுத் தவணைத் தொகையாக ஆண்டொன்றுக்கு 517 கோடியே 30 இலட்ச ரூபாயை தமிழக அரசே காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கும்.

*****

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.